# காவல் நிலைய புகார் மீது நடவடிக்கைக்கு

**(பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)**

அனுப்புநர் தேதி: . . . . . . . . .

**(பெயர் மற்றும் முகவரி எழுதவும்)**

பெறுநர்

பொது தகவல் அதிகாரி
. . . .**(காவல் நிலைய முகவரி எழுதவும்)**
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3) - காவல் துறையில் அளித்த புகார் மனு மீதான தகவல் கோருதல் - தொடர்பாக.

பார்வை: 1. . . . . . . . . . . . . . காவல் நிலையத்தில் அளித்த/அனுப்பிய எனது புகார் மனு நாள்: . . . . . . . **(பதிவுத்தபா-ல் அனுப்பியிருந்தால் அதன் விவரம் எழுதவும்)**
2. சி.எஸ். ஆர். எண்: . . . . மற்றும் நாள் : . . . .

- - - - - -

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)ன் கீழ், நான் கீழே கேட்டுள்ள தகவல்களை எனக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள புகார் மனு தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றுள்ளதா? ஆம் எனில் எந்த தேதியில் கிடைக்கப்பெற்றது? அதன் மீது இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளைத் தெரிவிக்கும் கோப்பின் நோட்பைல் நகல் உட்பட அனைத்துப் பக்கங்களின் ஒளி நகல்கள் வழங்கவும்.

2. மேற்படி புகார் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட அதிகாரியின் பெயர் மற்றும் அவர் பதவியின் பெயர் தெரிவிக்கவும்.

3. அ) விசாரணை அதிகாரி விசாரணை செய்த இடம், நேரம், தேதி மற்றும் யார் யாரை விசாரணை செய்தார் என்ற விவரங்களை வழங்கவும். ஆ) விசாரண செய்யப்பட்டவர்கள், சாட்சிகளின் பெயர் முகவரி மற்றும் அவர் விசாரணை செய்து பெற்றுள்ள வாக்கு மூலங்களின் ஒளி நகல்கள் வழங்கவும்.

4. அ) பொது நாட்குறிப்பு, காவல் நிலைய அதிகாரிகள் எழுதும் நாட்குறிப்புகள் (General Diary & Personal Diary) மற்றும் அதிகாரிகளின் அன்றாட அலுவல்களை எழுதும் முதல் நோட்புக் (First Note Book) ஆகியவைகளில் மேற்படி வழக்குகள் தொடர்பான விசாரணை விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா? ஆ) ஆம் எனில் அவைகளை எழுதியுள்ள பக்கங்களின் ஒளி நகல்களை வழங்கவும். இ) இல்லை எனில் அதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள காரணங்களைத் தெரிவிக்கவும்.

5. மேற்படி புகார் தொடர்பாக மேற்படி விசாரணை அதிகாரி அளித்த அறிக்கையின் நகல்கள் வழங்கவும்.

6. அ) மேற்படி வழக்கு சிவில் அல்லது கிரிமினல் வழக்கு என முடிவெடுக்கப்பட்டுள்ளதா? ஆ) ஆம் எனில் அதன் விவரம் வழங்கவும். இ) இந்த மனு தொடர்பான நடவடிக்கைகளின் போது, அரசு வழக்கறிஞரை தொடர்பு கொண்டீர்களா? ஈ) ஆம் எனில் அவர் வழங்கிய கருத்தின் நகல் வழங்கவும். உ) இல்லை எனில், தேவை இல்லை என எந்த கருத்தின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டதோ அவைகளைத் தெரிவிக்கவும். ஊ) எந்த அடிப்படையில் மேற்படி மனுமீதான தீர்வு நிர்ணயிக்கப்பட்டதோ அவைகளைத் தெரிவிக்கவும்.

7. அ) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா? ஆ) இல்லை எனில் எந்த அடிப்படையில் முடிவு செய்யப்பட்டது மற்றும் அதற்குரிய காரணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4(1)d ன்படி தெரிவிக்கவும். இ) ஆம் எனில் அதன் நகல் மற்றும் வழக்கு எண் ஆகியவற்றை வழங்கவும்.

8. அ) மேற்படி புகார் தொடர்பாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? ஆ) ஆம் எனில் அதன் நகல் வழங்கவும். இ) இல்லை எனில் எந்த அடிப்படையில் முடிவு செய்யப்பட்டது மற்றும் அதற்குரிய காரணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4(1)d ன்படி தெரிவிக்கவும்.

9. என் புகார் மீதான இறுதி முடிவு செய்வது, மற்றும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது இன்னும் எவ்வளவு நாட்களில் முடிவடையும்.

மேற்கண்ட தகவல்களைப் பெறுவதற்கு ரூ.10-க்கு நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

இப்படிக்கு,

**(ஒப்பம் மற்றும் பெயர்)**